# மீன்வளம்
# மற்றும் மீனவர் நலத்துறை

உள்நாட்டு மீனவர்களுக்கு 50%
மானிய விலையில் மீன்பிடி
உபகரணங்கள் வழங்குதல்





மீனவர்

ஐயா, வணக்கம். நான் ஆற்றுப்பகுதியில் 20 வருடங்களாக மீன்பிடித்தொழில் செய்து வருகிறேன், என்னுடைய மரத்தினாலான பரிசல் அடிக்கடி பழுது ஏற்படுவதுடன், வலையும் அடிக்கடி கிழிந்து விடுகிறது. புதிய பரிசல் மற்றும் வலை வாங்குவதற்கு போதுமான அளவு பணம் என்னிடம் இல்லை. புதிய மீன்பிடி பரிசல் மற்றும் வலை வாங்குவதற்கு ஏதேனும், அரசு திட்டங்கள் உள்ளதா?

ஆம், தமிழ்நாட்டில் நீர்த்தேக்கங்கள் மற்றும் ஆற்றுப்பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபடும் உள்நாட்டு மீனவர்களின் மீன்பிடித்திறனை அதிகரித்து, மீனவர்களின் வருவாயினை பெருக்கிட உள்நாட்டு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்களான மீன்பிடி வலை/மீன்பிடி பரிசல் வாங்குவதற்கு 50 சதவீத மானியம் வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



மீன்வள ஆய்வாளர்



எங்களுக்கு எல்லாம் அந்த திட்டத்துல பரிசல் கொடுப்பாங்களா ஐயா!!!





பயனாளி மாவட்ட மீன்வளர்ப்போர்
மேம்பாட்டு முகமை/உள்நாட்டு மீனவர்
கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக
இருத்தல் வேண்டும். மேலும், ஆதார்
அட்டை நகல், வங்கி கணக்கு புத்தக நகல்,
இதர ஆவணங்கள் மற்றும் விண்ணப்ப
படிவத்தை பூர்த்தி செய்து நம்முடைய
மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர்
நலத்துறை உதவி இயக்குநர்
அலுவலகத்துல கொடுத்துட்டு வாங்க!





நன்றி  ஐயா. நாளைக்கே
அங்கே போறன் !!!